# கிறிஸ்து மீண்டும் வருவது மிகவும் சிறந்தது




## 5.8 முழு பெலன்

**வேத வசனம்:** **பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.**
*அப்போ. 1:8*

**அறிக்கை:** **நாம் ஆவியால் நிறைந்திருக்கும்போது நம்மிடம் அதிக பெலன் இருக்கும்.**



**சத்தியம்:** நாம் தேவனுடைய பெலனுடன் வெற்றியுள்ள சீஷர்களாய் மாற ஆவியான வரால் நடத்தப்பட வேண்டும். நாம் பூமியெங்கும் அவருக்குச் சாட்சியாய் இருப்பதற்கு வேண்டிய பெலனைப் பெறுவதே அவருடைய சித்தம்.

### வேத பகுதி: அப்போஸ்தலர் 2

**பாடம்**

**1. தேவனுடைய சந்நிதானத்தை நெருங்கி அறிந்திருத்தல்:** உன்னதத்தில் வாழும் தேவாதி தேவன் மனிதரிடம் வந்து நம்மை தேவனோடு ஒப்புரவாக்கியது எத்தனை சிறந்த செயல். தம்மை நாம் அறியவும் அனுபவிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஒருமுறை அவர் கலிலேயாவில் இருக்கையில், "பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்." இது தேவ ஆவியானவர் தரும் ஞானஸ்நானத்தைப் பற்றியது. இப்படியாக தேவனை விசுவாசிப்பவர்கள் தேவனை அனுபவிக்கவும் அவருடைய தனிப்பட்ட உறவையும் பெறுகிறார்கள். (யோவான் 7:37-39)

**2. ஆவியானவரில் மகிழ்ச்சியோடும் பெலத்தோடும் இருப்பது:** பெந்தோகோஸ்தே என்ற நாளில் "அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்". அதன்பின்பு தேவ ஆவியானவர் யூதரல்லாத புறமக்களையும் நிறைத்து பற்பல பாஷைகளைப் பேசவும் தேவனை ஆராதிக்கவும் செய்தார். அவர்கள் அன்பாலும் வல்லமையாலும் நிறைந்து இயேசுவின் உயிர்த்தெழுதலை சாட்சியாக துணிவுடன் அறிவித்தார்கள். அநேகர் தங்கள் ஆஸ்திகளையும் வீட்டையும் விற்று ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுத்தனர். (அப். 2:1-4., 2:43-47., 4:32-35., 10:44-46)

**3. தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து முழுமையாகச் சுத்திகரிக்கப்பட:** ஒவ்வொருவரும் மனந்திரும்பி தேவனிடம் திரும்பவேண்டும் என்று வேதம் அறிவிக்கிறது. மனந்திரும்புதல் என்றால் நம்முடைய அனைத்து தவறுகளையும் அறிக்கையிட்டு அது கழுவப்படுதல். நம்முடைய கோபம், கசப்பு, விரோதம் போன்றவற்றை தேவனிடம் அறிக்கையிடவேண்டும். அவ்விதம் செய்யவில்லையென்றால் தூய ஆவியானவர் எவ்விதம் நம்மை நிறைக்க இயலும். புறங்கூறுதல், பொய்சொல்லுதல் போன்றவையும் பாவங்களே. (1 யோவான் 1:9)

**4. தேவனுடைய வார்த்தைகள் உறுதிப்படுத்தப்படுவதற்கும் அறிவிக்கப்படுவதற்கும்:** சாத்தான் ஆதாமையும் ஏவாளையும் ஏமாற்றியபோது மிகவும் நுட்பமாக பேசி அவர்களை நம்பச்செய்தான். அவர்களும் பிசாசின் மோசடியில் சிக்கி தேவனுடைய சித்தத்திலிருந்து விலகினார்கள். அவ்விதமான பிசாசின் மோசடியிலிருந்து பாதுகாக்கப்படவேண்டும் என்றால் தேவனுடைய வார்த்தைகளை நாம் போர் ஆயுதமாக பயன்படுத்தவேண்டும். வேத வார்த்தைகளை எங்கும் பிரசித்தமாக்கி அதை நம்முடைய அடுத்த தலைமுறை யினருக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். விசுவாச வசனங்களைக்கொண்டு நம்முடைய எதிராளியை வெல்ல முடியும் என்று வெளிப்படுத்தினவிசேஷம் 12:11 சொல்லுகிறது. (ஆதி. 3:3-6, ஏசாயா 59:21, எபேசியர் 4:29)

**5. தேவனுடைய உயிர்த்தெழுதலின் சக்தியை நாம் உணர்வதற்கும்:** தேவனுடைய நிபந்தனையற்ற அன்பு மிகவும் வல்லமையுள்ளது. தேவனுடைய அன்பு எப்போதும் நம்மை தப்புவித்து, நம்மை ஸ்தரப்படுத்தி, நம்பிக்கையைத் தந்து, பாதுகாக்கிறது. அவருடைய அன்பு மட்டுமே இதயத்தை தொட்டு பகையை மாற்றும். தேவனை அன்பை உடையவன் மிகவும் வலிமையானவன். தேவன் தம்முடைய அன்பின் வல்லமையால் இயேசுவை மரணத்தினின்று எழுப்பினார். அவர் தம்முடைய அன்பால் நம்மை நிறைத்து நம்மை வல்லமையுள்ளவர்களாக மாற்றுவார். (எபேசியர் 1:19-21)

**முடிவுரை:** நாம் எப்போதும் என்ன சொல்லுகிறோமே அப்படியே மாறுவோம். ஆகையால் நம் எதையும் கவனக்குறைவாகப் பேசக்கூடாது. தேவன் நம்மில் கிரியைச் செய்வதால் அவருடைய சத்தியத்தைப் பேசி அதை பிறர் அறியச் செய்யவேண்டும்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.